# வெளியே போங்க...!

எளிய மக்களின் பெரும் நம்பிக்கையாக தமிழ்நாட்டின் கல்வி அமைப்பு திகழ்ந்து கொண்டிருக்கிறது. தங்களின் பிள்ளைகளையும் தங்களது தலைமுறையையும் கல்வியால் முன்னேற்றிவிடலாம் எனும் பேராவல் அடித்தட்டு மக்களிடம் இருக்கிறது. அதன் காரணமாகத்தான் தாங்கள் என்ன மாதிரியான பொருளாதார சமூக இன்னல்களுக்கு ஆளானாலும், தங்களின் பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்புவதை முதன்மை பணியாக கருதுகிறார்கள் விளிம்புநிலையில் உள்ள மக்கள். தங்களின் வீட்டில் என்ன சுக துக்கங்கள் நிகழ்ந்தாலும் பிள்ளைகளை உடனடியாக பள்ளிகளுக்கு அனுப்புவதை கடமையாகவே செய்து வருகிறார்கள் நமது மக்கள்!

இதுபோன்ற நம்பிக்கை அளிக்கும் கல்வி அமைப்பிற்கு பெரும் வெளிச்சமாக இருப்பது அரசுப் பள்ளிகள்தான்! அரசுப் பள்ளிகள்தான் எளிய மக்களின் எதிர்கால அரணாகத் திகழ்கிறது. விடுதலைக்குப் பிறகான தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றங்கள் நடந்தாலும், ஒவ்வொரு ஆட்சியாளரும் பள்ளிகளில் மகத்தான சாதனைகளை படைத்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இத்தொடர்ச்சி என்பது அரசியல் கடந்த சிந்தனையில் மகிழ்ச்சியை தரக்கூடியது. ஆனால் இன்றைய சூழலில் கல்வி அமைப்பை காக்கும் அரசுப் பள்ளிகள் எனும் பெருஞ்சுவற்றை தகர்க்கும் வேலைகள் நடந்துகொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

**சமூக ஊடகங்களில் ‘இனிமேல் இதுதான் கடவுள் வாழ்த்து…’ என ஒரு படப்பாடலை காண்பித்து நய்யாண்டி செய்கிறார்கள். ஆனால் இந்த நய்யாண்டி என்பது உண்மையின் மறுவடிவமாகவே உள்ளது என்பதை மறுக்க முடியவில்லை. கவலை மேலோங்குகிறது!**

‘A B C D, அ ஆ இ ஈ…’ எனச் சொல்ல வேண்டிய மாணவச் செல்வங்களும், தாங்கள் படித்ததை ஆசிரியர்களிடம் வாசித்துக்காட்ட வேண்டிய மாணவர்களும் கைக்கட்டிக் கொண்டு ‘நண்பா… நண்பா…’ என படப்பாடலை பாடிக்கொண்டிருக்கிறார்கள். இதனை த.வெ. கட்சியினர் ரசித்து வீடியோவும் எடுத்துள்ளார்கள் என்பது வக்கிரமானது. குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு, அன்றாடப் பணியை செய்துகொண்டிருக்கும் பெற்றோர்களுக்கு இந்த அவலம் அந்நேரத்தில் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பள்ளி முடிந்து வீட்டிற்கு வரும்



**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
*பள்ளிக் கல்வித் துறை முன்னாள் அமைச்சர்*

குழந்தைகளை அதட்டி ‘டிவி பார்க்காம படி…’ என்பார்கள் பெற்றோர்கள். **ஆனால் சில குரூரமானவர்கள் பள்ளிக்கு சென்ற குழந்தைகளிடம் ‘படிக்காதே பாட்டுப் பாடு…’ என்கிறார்கள். எளிய மக்களின் வருங்கால நம்பிக்கையை, ஒரு தலைமுறையை கெடுக்கும் செயல் தொடங்கியுள்ளது.**

உயர்கல்வித் துறை அமைச்சர் ஒரு பள்ளிக்கு சென்று நடனம் ஆடுகிறார். அதில் தவறில்லை. ஆனால், அந்தப் பாட்டின் வரிகளும், அங்கே வெளிப்பட்ட பக்குவமின்மையும் முகம் சுளிக்க வைக்கின்றன. “Good Touch Bad Touch” பற்றி சொல்லிக்கொடுக்க வேண்டிய அமைச்சரே குழந்தைகளிடம் நடந்து கொள்ளும் விதம் என்பது அமைச்சருக்கானது அல்ல. அநாகரிகமான செயலை அமைச்சரே செய்துகொண்டிருக்கிறார்!

யாரை குளிர்விக்க மாணவர்களை பயன்படுத்துகிறார்கள் ஆளுங்கட்சியினர் என்பது புரியவில்லை. மாணவர்களை கொண்டு முதலமைச்சரின் படத்தை வரைவது! முதலமைச்சர் படத்தை வரைந்து அதில் மாணவர்களை அமர வைத்து சாதனைகள் நிகழ்த்துவது என்பது யாருக்காக? மாணவர்கள் தங்களின் திறமையின் மூலம் சாதனை படைக்க ஊக்குவிக்க வேண்டும் எனும் எண்ணம் உங்கள் அரசுக்கும் உங்கள் கட்சிக்கும் இருப்பதாக தெரியவில்லை. இதுபோன்ற செயல்கள் மாணவர்களின் திசைவழியை மடைமாற்றுவது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் நம்பிக்கையை சிதைப்பது ஆகும். “வாழ்க” கோஷத்தையெல்லாம் மாணவர்கள் சொல்ல தூண்டும் சமூக விரோதிகள் யார்? அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? தயவு செய்து பள்ளிகளை விட்டு வெளியே போய்விடுங்கள்!

பள்ளிகளுக்குள் நுழைய வேண்டும் என்றால் மக்கள் பிரதிநிதிகள்தான் செல்ல வேண்டும். கட்சி பிரதிநிதிகளுக்கு அங்கே எவ்வித அனுமதியும் கிடையாது! பள்ளி நிர்வாகம் அனுமதித்தாலும் அங்கே முதலமைச்சரின் போட்டோவை காட்டி மாணவர்களை உணர்ச்சி வசப்படுத்த எந்த அதிகாரமும் உங்களுக்கு கிடையாது! படிப்பறையில் மாணவர்கள் – ஆசிரியர்களை தவிர உங்களுக்கு என்ன வேலை? உங்களின் வெற்று புரட்சிகளை மக்களிடம் வந்து காண்பியுங்கள். உங்களின் செயல் மாணவர்களின் கைகளில் இருந்து புத்தகத்தை பிடுங்குவது போல் உள்ளது.

**இதை எடுத்துச் சொல்வதற்கு அக்கட்சியில் எவருமே இல்லை என்பதுதான் சகித்துக் கொள்ள முடியாத உண்மையாகவும் இருக்கிறது. பாசிச மனப்பான்மையில் முதலமைச்சரும் த.வெ.க தலைவருமான விஜய் உள்ளாரா? எனும் சந்தேகம் எழுகிறது. அடுத்த தலைமுறையின் கண்கள் புத்தகத்தையும் கரும்பலகையையும் மட்டுமே பார்க்க வேண்டுமே தவிர, உங்களின் அநாகரியங்களை பார்க்கக் கூடாது.** ‘கடமை கண்ணியம் கட்டுப்பாடு’ என்ற பேரறிஞர் அண்ணாவை மேற்கோள் காட்டும் தாங்கள், தங்களின் கட்சியினருக்கு கட்டுப்பாடு என்றால் என்ன? என ஒரு அறிக்கையாவது விட்டுள்ளீர்களா? கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாமல் பள்ளிகளுக்கு த.வெ.க கொடியை கட்டுவதெல்லாம் உங்களின் கண்களுக்கு தெரிகிறதா சி.எம். சார். இதற்கு கூட வாயைத் திறக்க மாட்டீர்களா?

உங்களை நான் விமர்சிக்கவில்லை. உங்கள் குற்றங்களை சுட்டிக்காட்டவில்லை! அன்பான வேண்டுகோள் மட்டுமே விடுக்கிறேன்.

**‘தயவுசெய்து அரசுப் பள்ளி மாணவர்களை தொந்தரவு செய்ய வேண்டாம்’ என்று மட்டும் சொல்லுங்கள். ‘அவர்கள் பகுத்தறிவு கொண்ட மனிதர்களாக உருவாக வேண்டும். அதனால் அவர்களை தொந்தரவு செய்யாதீர்கள் நண்பா நண்பீஸ்’ என ஒரு முறையேனும் சொல்லி விடுங்கள்.**

இனிமேலும் அரசு கண்ணைக் கட்டிக் கொண்டு இருக்கக் கூடாது! எளிய மக்களின் நம்பிக்கை காப்பாற்றப்பட வேண்டும். அரசுப் பள்ளி வளாகங்களுக்குள் அநாகரிமான செயல்களை அரங்கேற்றம் செய்யாதீர்கள்.

## முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை!

# விராலிமலை த.சந்திரசேகரன் தாயார் த.பிச்சையம்மாள் படத்திறப்பு!

### முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைக்கிறார்! சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் - அன்னியூர் சிவா - க.வைரமணி பங்கேற்பு!



புதுக்கோட்டை, ஜூன் 24 -

விராலிமலை சி.தனக்கோடியாபிள்ளை அவர்களின் மனைவியும் முசிறி த.பாலசுப்பிரமணியன், கழக விவசாயத் தொழிலாளர் அணித் துணைத் தலைவர் த.சந்திரசேகரன் மற்றும் நினைவில் வாழும் த. ரெங்கராஜ் ஆகியோரின் தாயார் த.பிச்சையம்மாள் படத்தை இன்று (24.6.2026 -புதன்கிழமை) காலை 11.00 மணியளவில் டி.என்.பி திருமண மஹால், (பைபாஸ் சாலை) விராலி மலையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர், எஸ்.ரகுபதி தலைமையில் தி.மு.க. கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு திறந்து வைத்து இரங்கல் உரை நிகழ்த்துகிறார்.

நிகழ்ச்சிக்கு முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், திருச்சி மத்திய மாவட்ட திமுக செயலாளர் க.வைரமணி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர், கழக விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், அ.இளங்குமரன், மு. பி.ம.சத்தியசீலன், கே.பி. அய்யப்பன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, எம்.கோவிந்தராஜ், ஓ.எஸ். வெங்கடாச்சலம், வை. விஜயக்குமார், எம்.எஸ்.ஏ. ரியாஸ் முகமது ஆகியோர். நிகழ்ச்சியில் மாநில, மாநகர, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக செய லாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்கின்றனர்.

## எஸ்.ஆர்.எம்.யூ. தலைவர்

# சி.ஏ.ராஜா ஸ்ரீதர் மனைவி திருமதி சாந்தி மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 24-

எஸ்.ஆர்.எம்.யூ. தலைவர் சி.ஏ. ராஜா ஸ்ரீதரின் மனைவி திருமதி. சாந்தி அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

SRMU தலைவர் சி.ஏ. ராஜா ஸ்ரீதர் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி சாந்தி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

உயிருக்கு உயிரான உற்ற துணையை இழந்து தவிக்கும் திரு. ராஜா ஸ்ரீதர் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## மாநகர காவல் ஆணையர்கள் உள்பட

# 14 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிடமாற்றம்!

சென்னை, ஜூன் 24 –

மாநகர காவல் ஆணையர்கள் உள்பட 14 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் 14 ஐபிஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பான உத்தரவை தமிழக உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் கே. மணிவாசன் பிறப்பித்துள்ளார்.

மதுரை காவல் ஆணையராக எஸ். ராஜேந்திரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சென்னை வடக்கு மண்டல கூடுதல் ஆணையராக கபில் குமார் சாரக்கர் நியமிக்கப் பட்டுள்ளார். திருப்பூர் மாநகர காவல் ஆணையராக எஸ்.ராஜேஸ்வரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு ஐஜியாக அனில் குமார் கிரி நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையராக தேன்மொழி நியமிக்கப்பட் டுள்ளார். லஞ்ச ஒழிப்புத் துறை சிறப்பு புலனாய்வு பிரிவு ஐஜியாக மகேஸ்வரி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் காவல் துறை தலைமையகத்தின் ஏடிஜிபியாக ஆயுஷ் மணி திவாரி நியமிக்கப் பட்டுள்ளார்.



திருத்துறைப்பூண்டி ஒன்றிய கழகத்தின் முன்னாள் செயலாளர் எஸ்.பி.முருகதாஸ் அவர்களின் நினைவஞ்சலிநிகழ்வில் நகர கழக செயலாளர்கள் ஆர்.எஸ்.பாண்டியன் ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் ஆகியோர் பங்கேற்று கழக கொடியேற்றியும், திருஉருவப் படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். எஸ்.பி.பாஸ்கர், எஸ்.பி.ராம கிருஷ்ணன், போஜராஜன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள

# கடலூர் கிழக்கு மாவட்டம் வழியாகச் செல்லும் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு கடலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

### மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



கழகத் தலைவர் அவர்கள் திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இன்று (24.06.2026 புதன்கிழமை) மாலை 05.00 மணியளவில் கடலூர் வழியாக செல்ல உள்ளார்.

எனவே கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட் முதல் கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் வரை கழகத் தலைவர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், கடலூர், புவனகிரி ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA), கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ.**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

## தி.மு.க. கல்வியாளர் அணி

# துணைத் தலைவர் - இணை, துணைச் செயலாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. கல்வியாளர் அணி மாநில துணைத் தலைவர் மற்றும் இணை – துணைச் செயலாளர்களாக கீழே குறிப்பிட்டுள்ளவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்ட கல்வியாளர் அணித் தலைவர் மற்றும் செயலாளர்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**துணைத் தலைவர் -** நாராயணன்,
திருவந்திபுரம் முதன்மைச் சாலை,
கே.என்.பேட்டை, கடலூர்.

**இணைச் செயலாளர்கள் -** டாக்டர் இரா. மலர்விழி ராஜா,
2/54, வீரபாண்டியர் தோட்டம்,
பூலவாரி, சேலம்.
திரு. ஆலடி எழில்வாணன்,
ஆலங்குடி ஊராட்சி நல்லூர்,
ஆலங்குளம், தென்காசி.

**துணைச் செயலாளர்கள்** – முனைவர் சுதா ஜெயக்குமார், தயாளு இல்லம், அபிராமி கார்டன்ஸ், காட்டூர் சாலை, இராசிபுரம், நாமக்கல். முனைவர் ராஜ்குமார், 7, மாருதி நகர், மயிலாடுதுறை. முனைவர் இளம் பரிதி 90, கிழக்குத் தெரு, காசாங்காடு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர். திரு. உதயக்குமார், ஏ.ஜி. பிளாக், 18வது தெரு,அண்ணா நகர், சென்னை. திருமிகு அனிச்சம் கனிமொழி, 4, காமராஜர் வீதி, சூரப்பட்டி அஞ்சல், வீரபாண்டி, ஈரோடு. திரு. ஏ.கே. அருணகிரி, 5 சி, ஐஸ்வர்யா அப்பார்ட்மென்ட்ஸ், ராம் நகர், சென்னை. திரு. மே. புருஷோத்தமன், 132, கொங்கு ரெட்டி தெரு, எழும்பூர், சென்னை. திரு. அணவயல் ச.கணேசன், 987/1, அபூர்வா இல்லம், புளிச்சாங்காடு, அணவயல், புதுக்கோட்டை..

**“அண்ணா அறிவாலயம்”**
**சென்னை 600 018,**
**நாள் : 22.06.2026.**

**துரைமுருகன்,**
**பொதுச்செயலாளர்,**
**தி.மு.க.**